**கவனிக்க.-** *2019.08.16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2138 - 2019 අගෝස්තු මස 23 වැනි සිකුරාදා - 2019.08.23**

*2138 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | 186 |


**கவனிக்க.-** (i) ஈடு (திருத்தம்) சட்டமூலம் 2019, ஓகத்து மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல், வாங்கல்கள் சட்டமூலம் 2019, ஓகத்து மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2019, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

185- B 81553 - 353 (2019/08)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

எனது இல. : புத்/கல்/ பு/ 31132/579

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேல் மாகாண சபையின், புத்தளம் மாவட்டத்தின், கல்பிட்டி பிரதேச செயலகத்தின், பிரதேச செயலாளரான மொஹொட்டி முதியன்சேலாகே நந்தன சோமதிலக ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1996.02.29 ஆந் திகதியன்று நிர்மலபுரவில் வசித்து வரும் கடுபிட்டியமுனிகே அல்பட் சில்வா என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த புத்/கல்/ பு/ 31132 ஆம் இலக்க அளிப்பிற்குரிய பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரித்துதாரர் ஆவதற்கான சட்டரீதியான உரிமையுள்ளவர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரிமையுள்ள ஒருவர் இருப்பினும், அவர் பின்னுரித்தாளராவதற்கு விருப்பமின்மையினால் பின்னுரித்தாளராவதற்கு யாரும் இல்லை என பதிவாகியுள்ளதால் அவ்வளிப்பினை மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை அறியப்படுத்துகிறேன். இது தொடர்பாக எதிர்ப்பு தெரிவித்தல்கள் இருப்பின் 2019.09.06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரியப்படுத்த வேண்டும்.

### அட்டவணை

புத்தளம் நிருவாக மாவட்டத்தின், கல்பிட்டி பிரதேசச் செயலகப் பிரிவின் மாம்புரி பற்றின்/வட்டாரத்தின், நிர்மலபுர (650B) கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நிர்மலபுர எனும் கிராமத்தில் அமைந்துள்ள 02 ஏக்கர், 00 றூட், 00பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள அரச காணி.

வடக்கு : பேதுரு புள்ளே என்பவரின் காணி ;
கிழக்கு : மஞ்சு என்பவரின் காணி ;
தெற்கு : ருவன் என்பவரின் காணி ;
மேற்கு : அரச காணி.

மொஹொட்டி முதியன்சேலாகே நந்தன சோமதிலக,
பிரதேச செயலாளர்,
கல்பிட்டி.

2019, மே 17.

08- 847/1

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின், நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ராஜபக்சகே திலின பிரதீப் சுமனசேகர ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உபபிரிவின், கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1994.04.27 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/அகோ/366 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான நிஸ்ஸங்க உயன எனும் முகவரியில் வசிக்கும் கொஸ்வத்தே குணசேன என்பவருக்கு கையளிக்கப்பட்டு, கம்பளை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஓ. பீ. 05/125 ஆம் இலக்கத்தின் கீழ் 1994.06.16 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.09.06 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின், அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் அம்பகமுவ பற்றில்/ கோறளையிலுள்ள கவரவில கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கவரவில எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வெளிக்களத்தாளில் பி. பி. நு. 1337 ஆவது வரைபடத்தில் 21 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டெயார் 0.059 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

காணியின் பெயர் - கவரவில தோட்டம், பிராகோ பிரிவு
வடக்கு : காணித்துண்டு இல. 08 மற்றும் 20;
கிழக்கு : காணித்துண்டு இல. 23 ஆவது காணி;
தெற்கு : காணித்துண்டு இல. 22 மற்றும் 23 ;
மேற்கு : ஜனபத வீதி இலக்கம் 22, 19 மற்றும் 20.

ஆர். டீ. பி. சுமனசேகர,
பிரதேச செயலாளர்,
கினிகத்தேனை.

2019, யூன் 26.

08- 847/2

பின்னிணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

சப்பிரகமுவ மாகாண சபையின், கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர்/ துணைக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையில்) எம். எம். பி. பிரியங்கனி பெதன்கொட ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உபபிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1960.05.29 ஆந் திகதி கையளிக்கப் பட்டுள்ள இலக்கம் R-6167 உடைய உறுதிப்பத்திரத்தின் உரிமையாளரான கொரவக்க கொலனியில் வசிக்கும் வெத்தகல முதியன்சேலாகே உக்கு பண்டாவுக்கு கையளிக்கப்பட்டு கேகாலை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 139 இன் கீழ் 1960.09.14 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணை யில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பிரதியீட்டாளராவதற்குச் சட்டபூர்வமாக உரிமையான ஆள் இல்லாததன் காரணமாக அல்லது உரிமையுள்ளவர் இருந்தாலும் அவர் பிரதியீட்டாளரா வதற்கு விருப்பமில்லாததால் பிரதியீட்டுக்கு ஒருவர் நியமிக்கப்பட வில்லை என்பதால் அந்தக் காணி உறுதிப்பத்திரம் மேலே சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருப்பதாக இங்கே அறிவிக்கிறேன். இது சம்பந்தமாக ஏதும் எதிர்ப்புகள் இருப்பின் அவற்றை 2019.09.06 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் தெரிவித்தல் வேண்டும்.

### அட்டவணை

கேகாலை நிருவாக மாவட்டத்தில், மாவனல்லை பிரதேச செயலாளர் பிரிவில் கினிகொட கோரளையில், லெவ்கே கிராம அலுவலர் பிரிவில் கொரவக்க எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், .................. பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் ............... உடைய கள பத்திரத்தில்/................ ஆல் தயாரிக்கப்பெற்ற இலக்கம் PPA 382 உடைய கட்டி கஉமே வரைபடத்தில்/ ............... ஆல் தயாரிக்கப்பெற்ற இலக்கம் ........... உடைய சுவட்டு வரைபடத்தில் இலக்கம் 39 உடைய காணித்துண்டு என காட்டப்பட்டு இருக்கும், விஸ்தீரணத்தில் ஹெக்டெயார் / ஏக்கர் ......, 03 றூட், 27 பேர்ச் கொண்டதாகவும், கீழே விபரிக்கப்பட்ட எல்லைகளையுடைய அரச காணி.

வடக்கு : PPA 382 இல் துண்டிலக்கம் 40 மற்றும் எபிடவத்தஹேன;
கிழக்கு : PPA 382 இல் துண்டிலக்கம் 44 ஜனபத பாதை ;
தெற்கு : PPA 382 இல் துண்டிலக்கம் 41 மற்றும் 37 ;
மேற்கு : PPA 382 இல் துண்டிலக்கம் 38.

எம். எம். பி. பிரியங்கனி பெதன்கொட,
பிரதேச செயலாளர்,
மாவனல்லை.

2019, யூலை 03.

08- 847/3

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

சப்பிரகமுவ மாகாண சபையின், கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனை பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் டபிள்யூ. எல். ஆர். இந்திக்க லியனகே ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உபபிரிவின் பிரகாரம் அலுவலரினால் 1959.03.20 ஆந் திகதி அளிப்புச் செய்யப்பட்டுள்ள ஆர் 5753 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான மொரகொல்லாஹேன குடியேற்றத்தில் வசிக்கும் லியனபேடிகே சிறிசேன என்பவருக்கு கையளிக்கப்பட்டு கேகாலை மாவட்ட காணிப் பதிவகத்தில் இலக்கம் 268 இன் கீழ் 1959.06.05 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக உரித்தாளர் ஒருவர் இன்மையினால் அல்லது உரித்தாளர் ஒருவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராவதற்கு விரும்பாத காரணத்தினால் பின்னுரித்திற்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளமையினால் குறித்த அளிப்புப் பத்திரத்தை, மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் அறிவித்தல் செய்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2019.09.06 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் தெரிவித்தல் வேண்டும்.

### அட்டவணை

கேகாலை நிருவாக மாவட்டத்தில், ரம்புக்கனை பிரதேச செயலாளர் பிரிவில் கல்பட மற்றும் கிணிகொட கோரலவில், கன்சலகம கிராம அலுவலர் பிரிவில் அம்பதென்ன எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், கேகாலை நில அளவை அத்தியட்சகரின் பொறுப்பில் இருக்கின்ற நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 103 ஆம் இலக்க இறுதி கிராம வரைபடத்தில் துண்டு இலக்கம் 35 கொண்ட 00ஏக்கர், 03 றூட், 38 பேர்ச்சஸ் விஸ்தீரணம் உள்ளதுமான, கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைகளுக்குட் பட்டதுமான அரச காணி மொரொகொல்லாஹேன.

வடக்கு : துண்டு இலக்கம் 34;
கிழக்கு : துண்டு டி ;
தெற்கு : துண்டு இலக்கம் 36 ;
மேற்கு : வீதி ஒதுக்கு.

டபிள்யூ. எல். ஆர். இந்திகா லியனகே,
பிரதேச செயலாளர்,
ரம்புக்கனை.

2019, மே 17.

08- 847/4

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல.: 4/10/26267.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : இ/தீப/தம/நசி/167.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பொலநறுவை மாவட்டம் தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 172 பொலநறுவை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொலநறுவை எனும் நகரில் அமைந்துள்ளதும் 2008/03/தம/06 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 01 றூட் 12.5 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு ஹெட்டி ஆராச்சிகே அனந்த என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத் தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : ஏ. ஏ. பதிராஜ மற்றும் பாதைக்கான ஒதுக்கு, பாதை;
கிழக்கு : அனுர ஷாந்த மற்றும் கரலயின் நானயகார;
தெற்கு : பாதைக்கான ஒதுக்கு மற்றும் கரலயின் நானயகார ;
மேற்கு : பாதை மற்றும் பாதைக்கான ஒதுக்கு.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி).

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான வர்த்தகப் பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக் குத்தகைப்பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 % இற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

தவணைப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மும்மடங்கு தொகை தண்டப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(உ) பிரதேசச் செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஏ) குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்படமாட்டாது.

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஏ. கே. என். செவ்வந்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச்செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, ஓகத்து 23.

08-848

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/55663.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : என்சிபி/பிஎல்சி/எல்4/எம்/04.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 67, மதவாச்சி மேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மதவாச்சி எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப்விபி 112 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 2.1846 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு இலங்கை மின்சார சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : எப்விபி 112 இல் காணித்துண்டு இல. 239, மன்னார்- மதவாச்சி பிரதான வீதிக்கான ஒதுக்கு;
கிழக்கு : எப்விபி 112 இல் காணித்துண்டு இல. 16, மன்னார்- மதவாச்சி பிரதான வீதிக்கான ஒதுக்கு ;
தெற்கு : எப்விபி 112 இல் காணித்துண்டு இல. 239, அரச காணி ;
மேற்கு : எப்விபி 112 இல் காணித்துண்டு இல. 239, வீதிக்கான ஒதுக்கு.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2018.05.18 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2018 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2018 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4 % வருடாந்த குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுப்பட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்;

தவணைப்பணம் : அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2018.05.18 ஆந்திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவுபெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப் படமாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, ஓகத்து 23.

08- 953